## UNIT - 5

# தமிழகத்தில் தொழில் வளர்ச்சி

தமிழ்நாட்டில் இருபதாம் நூற்றாண்டின் இறுதி வருடங்களில் தொழில் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு தொழில்கள் வளர்ச்சியடையத் தொடங்கின. வேளாண்மைத் தொழிலுக்குத் தேவையான நீர் அளிப்பு பற்றாக்குறையின் காரணமாக வேளாண் தொழிலிருந்து மெதுவாக தொழிற்சாலைகளுக்கு மாறி வருகிறது. தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி உலகமயமாக்குதல், தாராளமயமாக்குதல், தனியார் மயமாக்குதலை அடித்தளமாகக் கொண்டு விளங்கி வருகிறது. சிவப்பு நாடா எனப்படும் அரசாங்க மெத்தனப் போக்கை முறியடிக்க ஒற்றைச் சாளர முறை பின்பற்றப்படுகிறது. இவை தவிர பல புதிய தொழில்களை உருவாக்குவதற்கு பல்வேறு வரிச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. இதன் விளைவாக அந்நிய முதலீட்டுடன் பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு வேகமாக வளர்ச்சி பெற்று வருகின்றன.

## 1) வேளாண் தொழில் சார்ந்த தொழில்கள்:-

இதில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களைக் கச்சாப் பொருட்களாகக் கொண்டு பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை இயங்கும்.

(a) நெசவாலைகள் :-

பருத்தி ஆலைகள், பருத்திச் செடியிலிருந்து பருத்தியை பிரித்தெடுத்து, நூல்களாகத் தயாரித்து மின்னி சாயம் ஏற்றித் துணியல் துணிகளாக நெய்து வடிவமைத்து சந்தைக்கு அனுப்புவது வரை நெசவுத் தொழிலாகும். இவைகள் பஞ்சாலைகள், நூற்பாலைகள், தறிகள் (கைத்தறி, மின்சாதனங்களின் உதவியுடன் நெய்கின்ற மின்தறி) சாயம், வடிவம், ஏற்றம் தொழிற்சாலைகள் என்று பிரிக்கப்படுகின்றன. இவற்றில் ஏதேனும் ஒரு பிரிவினை மட்டுமோ அல்லது இரண்டு மூன்று வேலைகளைச் செய்யும் கூட்டுத் தொழிலாகவோ செயல்படும் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் காணப்படுகின்றன. தொழிற்சாலைகளில் 25 சதவிகிதம் நெசவாலைகள் ஆகும். நெசவுத் தொழிலில் 27 சதவிகித மக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபட்டு உள்ளனர். மதுரை, கும்பகோணம், ஆர்க்காடு, ஆரணி, காஞ்சிபுரம் போன்ற பகுதிகளில் சில குடும்பங்கள் பரம்பரைத் தொழிலாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ்நாட்டின் 808 பஞ்சாலைகளும், 834 நூற்பாலைகளும் உள்ளன. சுமார் 26 தொழிற்சாலைகள் பஞ்சைப் பிரித்து நூல் சுருள்களைத் தயாரிக்கும் கூட்டுத் தொழிற்சாலைகளாகச் செயல்படுகின்றன. சிறிய தறிகள் 15000க்கும் மேற்பட்டதாக உள்ளனர். சேலம், ஈரோடு, கோயமுத்தூர், கரூர், இராமநாதபுரம், மதுரை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் நெசவாலைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

(b) பட்டு நெசவு :-

பட்டு நெசவாலைகள் இந்தியாவின் மிகப் பழமையான தொழில்களாகும். பட்டு நூல்காரர்கள் என்று ஒரு சமூகமே இந்தத் தொழிலில் ஈடுபட்டு

வருகின்றன. இத்தொழில் கர்நாடகத்தில் இருந்து பட்டு நூலை வாங்கி அதனைப் பிரித்து, முறுக்கேற்றி சாயம் ஏற்றி, நூல்களாகத் தயாரித்துப் பின்னர் வெள்ளிச்சரிகை இழைகளுடன் கலந்து பட்டாடைகள் தயாரிக்கப்படுகின்றன. சேலம், தர்மபுரி, காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம், கும்பகோணம், மதுரை ஆகிய ஊர்களில் இத்தொழில் அதிக அளவில் நடைபெற்று வருகிறது.

c) சர்க்கரை ஆலைகள்:-

நெசவாலைகளுக்கு அடுத்தபடியாக வேளாண்மைச் சார்ந்த பெரிய தொழில்களில் சர்க்கரை ஆலைகள் ஆகும். கரும்பிலிருந்து சர்க்கரை, வெல்லம் கழிவுச் சாறிலிருந்து சாராயம் எனப் பலப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. கரும்பு சக்கையிலிருந்து காகிதம் போன்ற பொருள்களும் தயாராகின்றன. சர்க்கரை ஆலைகள் கரும்பு பயிரிடப்படும் இடங்களுக்கு அருகிலேயே நிறுவப்படுகின்றன. இதற்கு முக்கியக் காரணம் கச்சாப் பொருட்களான கரும்பை இதற்கு முக்கியக் காரணம் கச்சாப் பொருட்களான கரும்பை சர்க்கரையாகத் தயாரிக்கும் போது எடை இழப்பு ஏற்படுகிறது. தஞ்சாவூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், வேலூர், மோகனூர், ஆகியவை முக்கியமான சர்க்கரை உற்பத்தி மையமாகும்.

d) உணவுப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்:

இதில் நெல் அரைக்கும் அரிசி ஆலைகள், மாவு ஆலைகள், உணவு பதப்படுத்தும் ஆலைகள் ஆகியவைகள் அடங்கும். மேலும் பானங்கள் மற்றும் அப்பளம், ஊறுகாய், பப்படம், ஜாம், மாம்பழக்கூழ் தயாரிக்கும் ஆலைகள் தமிழ்நாடு முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றன.

e) காடுகளைச் சார்ந்த தொழில்கள்:-

மரம் அறுக்கும் ஆலைகளும், மரத் தளவாடங்கள், மரச்சாமான்கள் தயாரிக்கும் தொழிலும், வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிலும், மென் மரங்களை பயன்படுத்திக் காகிதம் மற்றும் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளும் தமிழ் நாட்டில் காணப்படுகின்றன. (வீடு கட்டவும், வீட்டிலும் பயன்படுத்தப்படும் மரப் பொருட்கள்) தமிழ்நாடு முழுவதும் பரவலாக உற்பத்தி செய்யப்படுகின்றன. தீப்பெட்டித் தொழிற்சாலைகள் விருதுநகர், வேலூர், சிவகாசி போன்ற இடங்களில் அதிகமாக உள்ளன.

f) காகிதத் தொழிற்சாலைகள்:-

மென்மையான மரங்களையும், கரும்பு சக்கையையும் கச்சாப் பொருளாகப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன. அச்சிடும் ஆலைகள் தமிழ்நாடு முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றன.

g) பிற தொழில்கள்:-

சக்திப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுள் பெட்ரோலிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், இயற்கை வாயு தயாரிக்கும் தொழிற்சாலை, நிலக்கரி, அனல் மின்சக்தி, நீர்மின்சக்தி, அணுமின்சக்தி தயாரிக்கும் தொழிற்சாலைகள் அடங்கும். தமிழ்நாட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் மணலியில் உள்ளன. இதில் கரிகம் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் உள்ளன. நிலக்கரி வெட்டி எடுக்கும் லிக்னைட் கழகம் நெய்வேலியில் உள்ளது. தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கு விநியோகிக்கப் படுகின்றது. தற்போது கூடன்குளத்தில் ரஷ்ய நாட்டு உதவியுடன் அணுமின் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

## 1. இரசாயனத் தொழிற்சாலைகள்:-

இவை பெரும்பாலும் நகரங்களில் காணப்படுகின்றன. இவைகள் உரங்களையும், பூச்சி மருந்துகளையும் தயாரிக்கின்றன. யூரியா, நைட்ரஜன், பாஸ்ஃபேட், பொட்டாசியம் 27 ஆயிரம் டன்களும், கலப்பு உரங்கள் 8.2 ஆயிரம் டன்களும் உற்பத்தியாகின்றன. இவைகளில் சிறப்பான தொழிலகங்களான ஸ்பிக், என்.எல்.சி, எப்.சி.ஐ ஆகியவைகள் இயங்குகின்றன. தமிழ்நாட்டில் 950 ஆயிரம் லிட்டர் பூச்சி மருந்துகள் தயாரிக்கப் -படுகின்றன. ராணிப்பேட்டை, திருவள்ளூர், தூத்துக்குடி போன்றவை இராசாயன தொழிலகங்களில் முக்கிய மையங்களாகும்.

## 2. தோல் பதனிடும் தொழிற்சாலைகள்:-

மிருகங்களின் தோல்களை உப்பு மற்றும் இரசாயனப் பொருட்கள் கொண்டு பதனிட்டு தோல் பொருட்களாக மாற்றி உள்நாட்டில் மட்டும் அல்லாமல் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றன தோல் பதனிடும் தொழிற்சாலைகள். தமிழ்நாட்டில் 10,022 தோல் பதனிடும் ஆலைகள் இருக்கின்றன. சென்னை, காஞ்சிபுரம், வேலூர், ஈரோடு, ராணிப்பேட்டை, பல்லாவரம், வாலாஜாபேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி, திண்டுக்கல் ஆகிய இடங்கள் தோல் பதனிடும் தொழிலகங்களால் முக்கியத்துவம் பெறுகின்றன. மற்றபடி தஞ்சாவூர், திருச்சி, தேனியிலும் கூட இவைகள் சற்று பரவலாகக் காணப்படுகின்றன.

## 3. கட்டுமானப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்:-

இதில் கருங்கல், ஜல்லி தயாரிக்கும் தொழிற்சாலை -களும், சிமெண்ட், ஆஸ்பெஸ்டாஸ் பலகைகள், பி.வி.சி பிளாஸ்டிக் குழாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் அடங்கும். கருங்கல் வெட்டி எடுக்கும் தொழிற்சாலைகள்

கனிமங்கள், பாறைகள் அதிகம் உள்ள சேலம், ஏற்காடு மற்றும் தர்மபுரி, திருச்சி போன்ற மாவட்டங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.

### 4. சிமெண்ட் தொழிற்சாலைகள்:-

சுண்ணாம்பு பாறைகள் நிறைந்த பகுதிகளான திருச்சி, திருநெல்வேலி, விருதுநகர், கரூர் பகுதிகளில் சிமெண்ட் உற்பத்தியாகின்றது. இது கட்டடம் கட்டப் பெரிதும் பயன்படுகின்ற முக்கியத் தொழில். சிமெண்ட் மற்றும் இதர பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் சங்கர் சிமெண்ட் தாழையூத்திலும், மதுக்கரை சிமெண்ட், செட்டிநாடு சிமெண்ட், டால்மியா சிமெண்ட், ஆலங்குளம் ஆஸ்பெஸ்டாஸ் ஆலைகள் பெயர் பெற்றவைகளாகும்.

### 5. பிற தொழில்கள்:-

இவைகள் மட்டுமின்றி கண்ணாடித் தொழிற்சாலை, இரப்பரிலிருந்து டயர் தயாரிக்கும் ஆலைகள், தோல் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், கணப்பொறிகள் தயாரிக்கும் நிறுவனங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் யாவும் பரவலாகக் காணப்படுகின்றன. மேலும் அரசு நிறுவனங்களான சிட்கோ, சிப்காட் மேலும் டிட்கோ போன்ற நிறுவனங்கள் தொழில் வளர்ச்சிக்கு உதவிபுரிகின்றன. கிண்டி, அம்பத்தூர், மணலி, எண்ணூர், ராணிப்பேட்டை, தூத்துக்குடி போன்ற நிறுவனங்கள் தொழில் வளர்ச்சிக்கு உதவி புரிகின்றன.

தொழிற்சாலைகள் வளர்ச்சி பெருவது எவ்வளவு முக்கியமோ அதேபோல் வேளாண் தொழிலையும், இயற்கை எழில், மாசு கட்டுப்பாடுகள் போன்றவை -களும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.